நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

பொது சன நூலகம்
12 MAY 2002

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை (12.05.2002) தொலைபேசி 3378 ஒலி 144

3 மாதத்திற்குள் சமாதான முயற்சிக்கு முடிவு

# புலிகள் உடன்படிக்கையை மீறினால் சர்வதேச நீதிமன்றில் முறையிடலாம்!

## பிரதமர் ரணில் அதிரடி அறிவிப்பு

(நமது நிருபர்)

* தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் பற்றிய திட்டவட்டமான முடிவுகள் இன்னமும் மூன்று மாதத்தில் எடுக்கப்படும்.
* விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டை அரசாங்கம் ஒரு போதும் அங்கீகரிக்கப் போவதில்லை.
* வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பது தொடர்பாக இதுவரை எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.
* யுத்தநிறுத்த மீறல்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டால் சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு செய்யவும், சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவும் முடியும்.

மாத்தறையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மாத்தறையில் சுமார் ஒரு கோடி ருபா செலவில் கட்டப்பட்ட புத்த விகாரை ஒன்றை பிரதமர் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் திறந்து வைத்தார்.

அவ்வைபவத்தில் கலந்து கொண்ட அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

(8ம் பக்கம் பார்க்க)

சிற்றி ஒவ் றிங்கோ

# பயணிகள் கப்பல் சேவை இடை நிறுத்தப்படும்?

(யாழப்பாணம்)

சிற்றிஒவ் றிங்கோ பயணிகள் கப்பல் சேவையினை இடைநிறுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்தில் இரு தடவைகள் இடம் பெற்று வந்த இப் பயணிகள் கப்பல் சேவையானது கடந்த ஒரு மாத காலமாக போதிய பயணிகள் இன்மையால் வாரத்தில் ஒரு தடவை மட்டுமே சேவையை மேற்கொண்டு வந்தது.

400பயணிகள் செல்லும் இக்கப்பலில் தற்போது 50-60 பயணிகளே திருமலை செல்வதாகவும், திருகோணமலையில் இருந்து 200பயணிகள் வரை யாழ் நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கப்பல் நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் சேவையினை இடைநிறுத்துவது

(8ம் பக்கம் பார்க்க)

படையினர் தங்கியுள்ள

# பாடசாலைகளைப் பார்வையிட உயர்மட்டக்குழு யாழ் வரும்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும்படைத்துறை அமைச்சின் உயரதிகாரிகள் அடங்கிய விசேட குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ் குடாநாட்டின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் குடாநாட்டில் படையினர் நிலைகொண்டுள்ள பாடசாலைகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளவும் படையினர் தங்கியுள்ள பாடசாலைகளிற்கு நேரடியாகச் சென்று பாடசாலையின் நிலைமை பற்றி ஆராயவுமே இக் குழுவினர் யாழ்ப்பாணம் வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண விஜயத்தையடுத்து இக்குழுவினர் கிழக்கு மாகாணத்திற்கும் செல்லத் திட்டமிட்டுள்ளனர் (இ)

# புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்ப்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## தமிழ்க் கூட்டமைப்பினரிடம் தமிழ்ச்செல்வன் வேண்டுகோள்

(வவுனியா நிருபர்)

புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் அமுல்படுத்துவதற்குத் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுப்பதுடன் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக மக்கள் எதிர்ப்புகளைக் காட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி நடுவப்பணியகத்தில் சு.ப.தமிழ்ச்செல்வனை, தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான அ. விநாயகமூர்த்தி செல்வம் அடைக்கலநாதன், ஆர்.சம்பந்தன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் நேற்று சந்தித்து சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை பேச்சுக்கள் நடத்தியிருந்தனர்.

இப்பேச்சுக்களின் போது

(8ம் பக்கம் பார்க்க)

தளுவத்தைக்கு வழங்கப்பட்ட

பிடியினர் நிலைகொண்டுள்ள பாடசாலைகள் பற்றிய விபரங்களை

திற்கும் செல்லாத திட்டமிட்டுள்ளனர் (இ)

லிதாவுக்கு எதிராக மக்கள் எதிர்ப்புக

# நோர்வே கண்காணிப்புக் குழுவுடன் இந்தியாவும் இணைய வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

(கொழும்பு)

நோர்வே நாட்டு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் இந்தியக் கண்காணிப்புக் குழுவினரும் பங்கு பற்றி இணைந்து செயற்படுவதைத் தான் விரும்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கையில் இந்தியக் கண்காணிப்புக்குழுவினர் இணைந்து செயற்பட வேண்டுமென்று இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்த ராஜபக்ஸ தனது கோரிக்கை குறித்து கடிதமொன்றையும் இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை அண்மையில் மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளதென்று கருத்து வெளியிட்ட ராஜபக்ஸ இத்தகைய நடவடிக்கைகளில் இந்தியக் கண்காணிப்புக் குழுவினரும் சேர்ந்து செயற்பட்டால் அது சிறந்ததாக இருக்குமென்றும் கூறினார். (இ)

# தளுவத்தைக்கு வழங்கப்பட்ட தூதுவர் பதவியை ரத்துச் செய்க!

## இராணுவ அதிகாரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

கூட்டுப்படைத்தளபதி ரொகான் தளுவத்தையை பிரேசில் தூதுவராக நியமித்தமையை ரத்துச் செய்ய வேண்டும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

முல்லைத்தீவு, ஜானகபுரம் இராணுவ முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டமைக்கும், ஜயசிக்குறு தாக்குதலின தோல்விக்கும் ஜெனரல் தளுவத்தை பொறுப்பாக இருந்துள்ளார். அத்துடன் இராணுவத்தளபதியாக அவர் இருந்த போது

(8ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
புதுப் பொலிவில்
நாளைய
வலம்புரியுடன்
சங்குநாதத்தையும்
கேட்டு வாங்குங்கள்
விலை ரூ 14

## அமெரிக்கக் கடற்படையின்

# அணு ஆயுதக் கப்பல் கொழும்பு வந்தடைந்தது

(கொழும்பு)

அமெரிக்காவின் நவீன வசதிகளைக் கொண்ட அணு ஆயுத நாசகாரிப் போர்க்கப்பல் நேற்றுக் காலை 9.45 மணியளவில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இலங்கை கடற்பரப்பில் நான்கு நாட்கள் இக்கப்பல் தரித்து நிற்குமென்று இலங்கைக் கடற்படையினர் நேற்றுத் தெரிவித்தனர்.

இக்கப்பலில் 90அமெரிக்கக் கடற்படை வீரர்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தடைநீக்கத்தை கண்டித்து பிக்குகள் கூட்டம்

(கொழும்பு)

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எடுத்துவரும் முன் முயற்சிகளைக் கண்டித்து தேசிய பிக்குமார் சம்மேளனம் மாபெரும் எதிர்ப்பு கண்டனக் கூட்டமொன்றை நேற்று நடத்தியது.

கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்திரளான பிக்குகள் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படக்கூடாதென்று வலியுறுத்திய பிக்குமார் சம்மேளனம் விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுபடக் கூடாதென்றும் கோரிக்கை விடுத்தது.

# சமாதானத்தை வலியுறுத்தி குதிரைச் சவாரி

(கொழும்பு)

சமாதானத்தை வலியுறுத்தி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட குதிரைச்சவாரி இன்று 3மணிக்கு வவுனியாவை

(8ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 6-11 வரையான பாடங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 15 மாணவர்கள், தனித்தனி கவனம், அனுமதிக்கு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5062)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட நல்லின டாஸ்கவுண்ட் (DASH HOUND) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 70 (34) கோவில் வீதி, யாழ்ப்பாணம். (கி-5098)


# தமிழக முதல்வர் ஜெயலலிதாவை இலங்கை வருமாறு அமைச்சர் மகேஸ்வரன் அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தரவேண்டுமென்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இவ் அழைப்பிதழை கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் கையளித்ததாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடிதத்தின் விபரம் வருமாறு,

18 வருடங்களுக்கு மேலாக போர்ச் சூழலிலிருந்த இலங்கையில் புதிய அரசாங்கம் சமாதான சூழலை உருவாக்கி இந்நாட்டில் வாழும் தமிழ் முஸ்லிம், சிங்கள மக்கள் ஐக்கியமாக வாழக்கூடிய சூழ்நிலையை எமது கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஏற்படுத்தியுள்ளதை தமிழ்நாட்டு முதல்வர் என்ற முறையில் நீங்கள் அறிவீர்கள்

உலகெலாம் வாழும் 8 கோடி தமிழர்கள் இலங்கை தமிழர்களின் பிரச்சினையில் அக்கறையும் அனுசரணையும் கொண்டுள்ளார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழக அரசும் தமிழக அரசியல்தலைவர்களும் நீண்ட காலமாக காட்டி வந்த ஆதரவையும் நீங்கள் அறிவீர்கள்.

1983 ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தினால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பையும் அழிவுகளையும், அறிந்த முன்னாள் இந்தியப் பிரதமர் மாண்புமிகு இந்திராகாந்தி அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க நேரடியாக தலையிட்டதையும் நீங்கள் அறிவீர்கள்.

சிங்கள அரசு தமிழ் மக்களை நசுக்கி ஒடுக்குகிறது. என்பதை உணர்ந்த திருமதி இந்திரா காந்தி ஈழத் தமிழர்களின் உரிமைப்போராட்டத்திற்கு அளித்துவந்த ஆதரவையும் நீங்கள் அறிவீர்கள். ஈழத்தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்த வேளை அவர் படுகொலை செய்யப்பட்டார். இந்த நிகழ்வு 1984 நவம்பரில் இடம் பெற்றது. அதன் பின்னர் தங்கள் அரசியல் குருவாக விளங்கியவரும் முன்னாள் முதலமைச்சராக விளங்கியவருமான டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் ஈழத்தமிழர்களுக்கு முழு ஆதரவாக இருந்தமையும் மத்திய அரசின் ஆதரவைப்பெற்று எமது பிரச்சினைகளை தீர்க்க முனைந்தமையும் நீங்கள் அறிவீர்கள்.

எனவே, தமிழகத்திலுள்ள 5கோடி தமிழர்களும் உலகத்தில் பரந்து வாழும் தமிழர்களும் ஈழத்தமிழர் விவகாரத்தில் அக்கறை கொண்டிருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஈழத்தமிழர்கள் தங்கள் உரிமைக்காக கடந்த 20வருடங்களாக நடத்திவந்த போராட்டத்தினால் 60ஆயிரம் தமிழ் பேசும் உயிர்களைபலிகொடுத்ததையும், 18 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள வீரச்சாவு அடைந்ததையும், ஒரு இலட்சம் வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டதையும், பல்லாயிரம் குடியிருப்பு ஏக்கர் காணியில் இராணுவம் ஆக்கிரமித்திருப்பதையும், 1500 இற்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டமையும், மதிப்பிட முடியாத பொருள் பண்டங்களை இழந்ததையும் நீங்கள் அறிவீர்கள். இதற்கு மேலாக 18 ஆயிரம் தமிழ் பெண்கள் விதவைகளாக்கப்பட்டு வட, கிழக்கு மாகாணங்களில் பரிதாப நிலையில் வாழ்ந்து வருவதை தாய்மை உளங்கொண்ட முதல்வர் என்ற முறையில் நீங்கள் கருணையுடன் அணுகுவீர்கள். இது தவிர பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் அனாதைகளாக்கப்பட்டு பல்வேறு அநாதை நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். கால், கைகள் இழந்து பல்லாயிரக் கணக்கானவர்கள் ஊனமுற்றவர்களாக வாழ்ந்து வருவதையும் அறிவீர்கள்.

ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத்தமிழர்கள் இடம் பெயர்ந்து இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு எங்கள் உடன் பிறப்புகளாகக் கருதக்கூடிய தமிழர்கள் இந்த அவலநிலையிலிருந்து விடுபட்டு சுதந்திர மனிதர்களாக வாழ்வதற்கான ஒரு அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலுள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசியல் பேச்சுவார்த்தைக்கு முன்பாக போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு சிறந்த முறையில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்த மக்கள் இன்று இயல்பான ஒரு நிலையை அடைந்து வருகின்றனர். அதை நான் சார்ந்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உறுதியுடன் செய்து வருகிறது. இந்த நல்ல முயற்சிக்கு இலங்கையிலுள்ள இனவாதக் கட்சிகள் இனவாதக் குரல்களை எழுப்பி எதிர்ப்பு தெரிவித்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்த சூழ்நிலையில் 5 கோடி மக்களின் முதல்வராக இருந்து வருகின்ற நீங்கள் மேற்கொள்ளவேண்டிய அரசியல் நடவடிக்கைகள், ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்பது எமது வேண்டுகோளாகும். தமிழகத்திலுள்ள அரசியல் காரணமாகவும், அங்குள்ள அரசியல் விரோதிகளுக்கு எதிரிடையாகவும் நடக்க வேண்டும் என மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு பாதகமாக அமையக்கூடியது.

ஈழத் தமிழர்களது நிலைப்பாட்டை நீங்கள் நேரில் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமுண்டு என நான் மனப்பூர்வமாக உணர்கின்றேன். இதைக் கருத்திற்கொண்டு தாங்கள் நல்லெண்ண பிரயாணமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருமாறு எமது அரசாங்கத்தின் சார்பில் தங்களை அன்புடன் அழைக்கின்றேன். நீங்கள் இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்ப்பீர்களானால் அவை உங்கள் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வழிவகுக்கும். அதேவேளை உலகெல்லாம் பரந்துவாழும் 8 கோடி தமிழர்களின் நல்லாதரவைப் பெற்று தமிழ் மக்களின் நன்மதிப்புப் பெற்ற தமிழ் தலைவியாக விளங்க வழி வகுக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

(இ-8)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 3 நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9.00மணி தொடக்கம் பி. ப.4. 00மணி வரையும்யாழ்.வை.எம்.சீ.ஏ. கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கு தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சாந்தியகப் பிரதிநிதிகள், யுனிசெப் பிரதிநிதிகள் கருத்துரை வழங்கவுள்ளனர். (உ- 6)

## துலாவில் சென்றவர் துலை உடைந்து தூக்கி வீசப்பட்டார்

(மந்திகை)

உழவு இயந்திரத்தின் துலாவில் நின்றபடி சென்று கொண்டிருந்த போது உழவு இயந்திரத்தின் துலை உடைந்ததில் தூக்கி வீசப்பட்ட தொழிலாளர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடத்தனையைச் சேர்ந்த வேலும்மயிலும் சுதாகரன் (வயது-18) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23

## புதிய நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையின் தலைவராக டாக்டர் வை. தியாகராசாவும், செயலாளராக கே. விக்னேஸ்வரனும்,பொருளாளராக த.உபவீரசிங்கமும்,செயற்குழு உறுப்பினர்களாக எஸ். தவகுலம், ஏ.ஞானரட்ணம், இ.மயில்வாகனம், எஸ்.குலசேகரம், கே.கோபாலன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ)

## வெள்ளைப் பூரான் பாதிப்பு அதிகரிப்பு

(மந்திகை)

வடமராட்சிப்பிரதேசத்தில் வெள்ளைப்பூரான் கடிக்கு இலக்காவோர் தொகை அண்மைக்காலங்களில் அதிகரித்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான வெள்ளைப்பூரான் கடி பாதிப்புக்களுக்குள்ளான 10 பேர் கடந்த இரு வாரங்களில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுள்ளனர். (உ-23)

வாகனங்களை ஒழுங்கமைப்பில் நிறுத்துக

## வாகன சாரதிகளுக்கு உடுபொல்ல அறிவுறுத்து

(யாழ்ப்பாணம் )

யாழ். ஸ்ரான்லி வீதிப்பகுதியில் ஏற்பட்டிருக்கும்போக்குவரத்து நெருக்கடியினை தவிர்க்க, பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களை ஓர் ஒழுங்கமைப்பில் நிறுத்துமாறு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி உடுபொல்ல அறிவுறுத்தியுள்ளார்.

ஏ-9 நரை வழிப்பாதை திறக்கப்பட்டதையடுத்து பெரும் தொகையான வாகனங்கள் பொருட்களுடன் குடாநாட்டிற்குவருவதாலும் இப்பொருட்களை இறக்கும்போது நீண்ட நேரம் வீதியில் தரித்து நிற்பதாலும் பெரும் போக்குவரத்துநெருக்கடி ஏற்படுகின்றது.

எனவே பொருட்களைஏற்றி இறக்கும் வாகனங்களை ஓர் ஒழுங்கமைப்பில் விடுமாறு வாகன சாரதிகளை பொலிஸ் அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (உ-10)

வல்லரசுகளின் தலையீட்டால்

## சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்படக் கூடாது வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

சர்வதேச வல்லரசுகளின் தலையீடுகளினாலும், உள்நாட்டு இனவாத சக்திகளின் ஆதிக்கத்தாலும் சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துக்கு அளித்த பேட்டியின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளின் போது. திட்டமிட்ட தீர்மானங்களின் அடிப்படையிலேயே இருதரப்பினரும் மேசையில் அமர வேண்டும்.

அவ்வாறல்லாமல் அவசரயாக மேசையில் அமர்வதன் மூலம், இப்போது கட்டியெழுப்பப்பட்டுக்கொண்டிருக்கும் நல்லதொரு சூழ்நிலை சீர்குலைந்து விடும் எனவும் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசு ஒன்று அமைப்பது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில்,

ஜனாதிபதி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணியுடன் இவ்வாறானதொரு ஆட்சியமைப்பதில் எதுவித பிரச்சினையும் இல்லை என்றும், அதனை தமது கட்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆதரிக்காது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## வலிவடக்கு மக்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் ஒரு லட்சம் மக்களது பிரச்சினைகளை முன்வைத்து நடைபெறவுள்ள அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்பு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலி வடக்கு புனர்வாழ்வுக் கழக ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வலிகாமம் வடக்கிற்குட்பட்டசன சமூகநிலையங்கள்,கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலய பரிபாலன சபைகள், சீமெந்துத்தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் பொதுநிறுவனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளைத் தவறாது சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

12-05-2002
(சித்திரை 29 ஞாயிறு)
அமாவாசை பி.ப 4-55
பரணி பி. ப. 2.58
இராகுகாலம் 4-24 - 5-54
சுபநேரம் 8-54 - 10-24
கார்த்திகை விரதம்
அமாவாசை விரதம்

**மேடம்**
நல்ல முயற்சி, பெரியோர் ஆதரவு, கற்பனை மிகுதி, பொருள் சேர்க்கை

**இடபம்**
சயனசுகக் குறைவு, முயற்சி மந்தம், உணர்ச்சி வசப்படல் தனவிரயம்

**மிதுனம்**
தெய்வதரிசனம், தொழில் சிந்தை, காரிய அனுகூலம், பெரியோர் சந்திப்பு

**கடகம்**
உற்சாகம், சுபநிகழ்வு, காரிய நன்மை, பிறர் உதவி

**சிங்கம்**
உடல்நலக்குறைவு, முயற்சி மந்தம, புதிய சிந்தை, கடின உழைப்பு

**கன்னி**
போசன சுகம், வீண்பிரச்சினை, மனச்சோர்வு, காரிய அலைச்சல்.

**துலாம்**
பிரயாணம், பணவரவு, காரிய வெற்றி, நண்பர்கள சந்திப்பு.

**விருச்சிகம்**
முயற்சி வெற்றி, மகிழ்ச்சியான நிகழ்வு, உறவினர் சந்திப்பு.

**தனுசு**
வியாபார நன்மை, குடும்பக் கவலை, உறவினர் சந்திப்பு, முயற்சி தோல்வி

**மகரம**
காரிய தாமதம், உடல் வியாதி, கலவிச் சிறபபு, உறவினரிடையே மனககசப்பு

**கும்பம்**
காரிய வெற்றி, கூட்டு முயற்சி, கௌரவம், இரதத உறவினரால் நனமை

**மீனம்**
தனவிரயம், மனக்கிலேசம் முயற்சி தாமதம், கௌரவக் குறைவு

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# பிரதமர் ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு பௌசி பாராட்டு

(கொழும்பு)

இருதசாப்தங் களாக நடைபெற்று வரும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினால் முன்னெடித்துச் செல்லப்படும் முயற்சிகள் பாராட்டத்தக்கவைஎன பொது ஜன ஐக்கியமுன்னணியின்பாராளுமன்றஉறுப்பினர் எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

இலண்டன்பி.பி.ஸி.செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்தொடர்ந்தும் கூறியதாவது; நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகளிற்குசந்தேகம் ஏதும் ஏற்படாதவிடத்தும், பிரதமர் நேர்வழியில் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லுமிடத்தும்இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது வெற்றியளிக்கும். தமிழீழ விடுதலைப்புலிகளுக்காகவன்றி மக்களுக்காகவே சமாதானம் முன்னெடுத்துச்செல்லப்படவேண்டும்.

தேசிய அரச ஒன்று அமைவதன் மூலமே இப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்

தாய்லாந்தில் இருசாரார்களுக்கும் இடையே நடைபெறவிருக்கும் நாடு பிளவு படுவது தொடர்பான பேச்சு வார்த்தையினைஒரு போதும் தான் அனுமதிக்க மாட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார் (உ-8)

## அரசு ஆலோசனை

(கொழும்பு)

அரச கடமையிலிருந்து ஓய்வு பெற்ற பின் கடமையாற்ற விரும்பும் தாதிமாருக்கு, சம்பளத் திட்டத்திலிருந்து ஐம்பது சதவீதத்தை வழங்குவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது என சுகாதார, போசனை மற்றும்பொதுநலன் அமைச்சர் பி. தயாரட்ண தெரிவித்துள்ளார்,

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் சர்வதேச தாதிமார் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேநேரம், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அரச தாதி சேவைக்கென 1 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக பிரதி சுகாதார அமைச்சர் சஜித் பிறேமதாஸா தெரிவித்துள்ளார். (உ-8)

## ஐஸ்கிறீம்கடையின் கூரையில் பொருத்தப்பட்ட குண்டு செயலிழக்க வைப்பு

(மானிப்பாய்)

கடையின்கூரையில்மறைத்து வைக்கப்பட்ட குண்டு, படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மானிப்பாய் ஆலடிச் சந்தியில் உள்ள குலம் கிறீம் ஹவுசில் இடம் பெற்றுள்ளது.

மேற் கூரையில் கைக்குண்டொன்று பொருத்தப்பட்டிருந்ததை அவதானித்த கடை உரிமையாளர் உடனடியாக மானிப்பாய் பொலிஸில் அறிவித்தார்.

இதனையடுத்து அவ்விடம் விரைந்த குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினர், மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் வைத்து குண்டை வெடிக்க வைத்தனர்.

இதனால் ஏற்பட்ட பெரும் சத்தத்தால் அப்பகுதியில் சற்று நேரம்பெரும் பரபரப்பு நிலவியது.

இதேவேளை, மேற்படி குண்டினை யார் எதற்காகப் பொருத்தினர்என்பது தெரியவரவில்லை. (உ-232)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுக்கூட்டம் ஜூன்மாதம்இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## வடக்கு- கிழக்கு கல்விசார் நடவடிக்கைகள் விருத்தி செய்யப்படும்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் கல்விசார் நடவடிக்கைகள் விருத்தி செய்யப்பட வேண்டும் என்று கல்வி கலாசார மனித வள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் நாட்டின் உதவியுடன் வடக்கு- கிழக்கிலுள்ள பாடசாலைகளுக்கு அடிப்படைவசதிகளை செய்து கொடுக்கும் திட்டம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் இக்கால கட்டத்தில், அது பூரணப்படுத்தப்பட வேண்டுமானால், வடக்கு- கிழக்கு கல்விசார் நடவடிக்கைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

வேலை வாய்ப்பு, தொழிற் பயிற்சி போன்றவற்றினை அங்கு வாழும் இளைஞர், யுவதிகள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மூளாய் வீதி இளைஞர் உடலுள விருத்திச் சங்கம் நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விழா இன்று பி.ப 1.30 மணிக்கு அடைக்கலம்தோட்டம் கந்தசுவாமி கோயில் திருக்கல்யாணமண்டபத்தில் ப.தேவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருத்தினராக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வலிமேற்கு பிரதேச செயலர் செ.இரத்தினம் வட்டுக்கோட்டை மிருகவைத்திய அதிகாரி ஜி.இரகுநாதன் ஆகியோரும்கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## படகு படையினர் பாவனையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் குருமன் வெளி-மண்டூர் பிரதேசங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகினை, விசேட அதிரடிப்படையினர் தமது பாவனைக்காக எடுத்துச்செல்வதனால்பொது மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக மாவட்ட அரச அதிபர் கண்காணிப்புக் குழு ஆகியவற்றிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 8.00 மணிக்கு சேவைக்குட் படுத்தப்பட வேண்டிய படகினை, படையினர் எடுத்துச் செய்வதனால் ஆசிரியர்கள உத்தியோகஸ்தர்கள் உட்பட அரசஊழியர்கள் அனைவரும் கடமை நேரத்துக்கு செல்ல முடியாது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன்,

மாலை வீடு திரும்பும் போதும் இதே நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## அடகுக் கடனுக்கான கொடுப்பனவில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கி தனது வாடிக்கையாளர்களின் நன்மைகருதி அடகுக் கடன் கொடுப்பனவில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இம்மாதத்தில் இருந்து தங்கப்பவுண் அடகுக் கடனுக்கான கொடுப்பனவினை 25 வீதத்தால் உயர்த்தியுள்ளது.

இதன் பிரகாரம் 22 கரட் தங்கப்பவுண் ஒன்றிற்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அத்துடன், வட்டி வீதத்தினை 22 இல் இருந்து 20 வீதமாக குறைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

## அரச சேவையில் உத்தேச சீர்திருத்தம்

(கொழும்பு)

அரச ஊழியர்களின்சேவையில் உத்தேச சீர்திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக புரிந்துணர்வு ஏற்படுத்தும் திட்டம்ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தனதெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவைகள் அனைத்தையும் நாட்டின் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதே இச் சீர்திருத்தத்தின் நோக்கமாகும் எனவும்,

உலகவங்கியின்உதவியுடன் அமுல் செய்யப்படும் இத்திட்டம் தொடர்பாக அரச உத்தியோகஸ்தர்களின் யோசனைகளையும், கருத்துக்களையும் அறிந்து கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் கருத்தரங்குகள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார், (உ-8)

## யாழ் மாவட்டத்தில் ஹற்றன் நஷனல் வங்கியில் தன்னியக்க கரும பீடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாகயாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஹற்றன்நஷனல் வங்கியில் பெட்கார்ட் முறை எனப்படும் தன்னியக்க கருமபீடம் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 20 ம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம், இலங்கையின் எப்பாகத்திலாவது ஹற்றன் நஷனல் வங்கியில் வைப்புச் செய்திருந்தால்அதனையாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் இக்கிளைமூலம் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. (உ-2)

## ஜி.ரி.சற். பிரதிநிதிகள் நீர் விநியோகத் திட்ட பயனாளிகளைச் சந்திப்பர்

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தேசிய நீர் வழங்கல் வடிகால் திணைக்கள நீர் விநியோகத் திட்டப் பயனாளிகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிநிதிகள் சந்தித்து குடிநீர் விநியோக விஸ்தரிப்பு மற்றும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

இதன் அடிப்படையில் துன்னாலை மேற்கு- கட்டைவேலி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுடனான சந்திப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை பி.ப. 2.00 மணிக்கு கட்டைவேலி சனசமூக நிலையத்திலும்,

கரவெட்டி தெற்கு- மத்தொனி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்களுடனான சந்திப்பு 15 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு யாக்கரு சித்தி விநாயகர் பாடசாலையிலும்,

கரவெட்டி மத்தி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்களுடனான சந்திப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும்,

கரவெட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு கிழவி தோட்டம் கிராம அலுவலர் அலுவலகத்தில் 20 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கும்

துன்னாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு 20 ஆம்திகதிபி.ப. 3.30 மணிக்கு துன்னாலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் இடம் பெறவுள்ளது. (உ-23)

## தென்பகுதியிலிருந்து ஓடுகள் எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலஇடைவெளியின் பின்னர், தென்பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு ஓடுகள் எடுத்து வரப்படுகின்றன.

தென்பகுதிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தரைவழிப்பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்தே ஓடுகள் எடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## சங்கே முழங்கு

### வீட்டு இலக்கமும் வீத வரியும்

உள்ளூராட்சி மன்றங்கள் வருமான நோக்கமாகவே மதிப்பீட்டு வரி அறவிடப்படுகின்றது. இந்த நோக்கத்திற்காகவே ஆதனங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் இலக்கமிடப்பட்டு அவையே வீட்டு இலக்கமாகக் கருதப்படுகின்றது. ஆதனங்கள் சட்டரீதியாகக் கைமாறும் போது வட்டாரம், வீதி, வீட்டு இலக்கம் குறிப்பிடுவதன் மூலம் குறித்த ஆதனம் தெளிவாகத் துல்லியமாக இடம் அறியப்படுகின்றது. மதிப்பீட்டு வரிகள் பொதுவாக ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை மீளாய்வு செய்யப்படுகின்றது. அதன் போது வரிமதிப்பு இலக்கம் மாற்றமடைகின்றது. மாநகர சபை போன்றவை வரிமதிப்பினை தாமே தமது ஊழியர்கள் மூலம் நிறைவேற்றுவது பொருத்தமானது. யாழ்ப்பாண மாநகர சபையும் வரிமதிப்பு (VALUATION) பகுதி ஆரம்பிக்கவில்லை. மதிப்பீடு செய்யும்போது ஆதன இலக்கம் மாறுபடாது இருத்தல் வேண்டும். உதாரணமாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வீட்டு இலக்கம் மாற்றமடைவதில்லை. மாநகர சபை ஊழியர்களே இக்கடமை புரிவதால் சிறப்பாக நிர்வாகம் அமைவதாகக் கருதப்படுகின்றது.

இதனால், வீட்டிலக்கம் எதிர்காலத்திலும் மாற்றமடையாது இருப்பதை உறுதி செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அதனை விடுத்து வரிமதிப்பு ஆண்டை வீட்டு இலக்கத்திற்கு முன்னர் சேர்ப்பது என்பது யாழ். மாநகர சபையில் சோலைவரிப் பகுதியினருக்கு மாத்திரமே தெரிந்ததொன்றாகும். வாடகை கணக்கீடு செய்வதற்கு **FIRST YEAR OF ASSESSMENT** என்பது மாநகர சபைக்கோ கட்டட உரிமையாளருக்கோ திடமாகக் கூறமுடியாதுள்ளது. கட்டட உரிமையாளர் தொடர்ந்தும் அதே கட்டடத்தில் இருக்க வேண்டுமென எதிர்பார்க்க முடியாது.

30. 04. 2002 இல் வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகிய வீட்டு இலக்கத்துடன் ஆண்டைச் சேர்ப்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே இறுதியாக மீளாய்வு செய்யப்பட்டு முடிவாகிய வீட்டு இலக்கத்திற்கு மாநகர சபையால் தகடுகள் வழங்கப்பட்டால் எவ்வித பிரச்சினைக்கும் முகங்கொடாது தவிர்த்திருக்கலாம்.

**வி. எஸ். ஆர்**

கந்தர்மடம்.

# யாழ்.-கண்டி வீதியூடான பயணத்திலுள்ள இடையூறுகள் குறித்து படையினர் புலிகள் பேச்சு

(வவுனியா)

யாழ்-கண்டி ஏ-9 வீதியூடாக தற்போது நடைபெறும் பொதுமக்கள் மற்றும் வாகனப் போக்குவரத்துக்களை மேலும் சீராக்குவது தொடர்பாக விடுதலைப் புலிப் பிரமுகர்களும் இராணுவத்தினரும் நேற்று முன்தினம் காலை ஓமந்தையில் சந்தித்துஉரையாடியுள்ளனர்.

வாரத்தில் ஏழுநாட்களும் காலை 6. 00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிப்பது, வாரத்தில் ஏழு நாட்களும் கட்டுப்பாடுகளின் றி பொருட்களைவாகனங்களில்கொண்டு செல்லஅனுமதிப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஓமந்தை சோதனைச்சாவடியூடானபோக்குவரத்துக்களை மேலும் இலகுவாக்குவதற்கு இருதரப்பிலும் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் இந்தச் சந்திப்பின் போது ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஒருதடவையில் 50 வாகனங்களை அனுமதித்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தச் சந்திப்பின் போது புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக படைவட்டாரங்கள் தகவல்வெளியிட்டுள்ளன.

இந்தச்சந்திப்பின் போது புலிகள் தரப்பில் அரசியல்துறையைச்சேர்ந்ததங்கன், புலித்தேவன்ஆகியோரும் இராணுவத தரப்பில் வன்னிப்பிராந்திய பிரிகேட் தளபதியும்பிரசன்ன மாகியிருந்தனர். (உ-5)

## முதியவர் மரணம்

கடந்த மாதம் பொதுசன மாதாந்த உதவிப் பணம் எடுக்கச் சென்ற வேளை, கரவெட்டி தபாலகம் முன் ஏற்பட்ட வாகன விபத்தில் சிக்கி வலது காலை இழந்த நிலையில், பருந்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஆழ்வான் கட்டையன் (வயது-75) என்ற முதியவர் சுகயீனம் காரணமாக கடந்த புதனன்று மரணமடைந்துள்ளார். (உ-23)

# 'சரத் சந்திரா'வின் நாடகக் குழுவினர் இம்மாத இறுதியில் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிங்கள நாடக அரங்கைத் தோற்றுவித்த வரும் சிங்கள நாடகப்பிதாமகன் என்று அழைககப்படுபவருமான பேராசிரியர் எதிர் வீர சரத் சந்திராவின் நாடகக் குழுவினர் இம்மாதம் 30 ஆம்திகதி திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்.வரவுள்ளனர்.

இக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் சிங்களப் பாரம்பரியம் தழுவிய 'மனமே' என்னும் நாடகத்தை ஆற்றுகை செய்யவுள்ளனர்.

இந்த ஆற்றுகை நடகமானது க.பொ. த(உ/த) மாணவர்களுக்கு சிங்கள அரங்கில் முக்கியபாடமாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ் ஆற்றுகை எதிர் வரும் 2,3ஆம் திகதிகளில் முறையே யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கிலும், யாழ், வேம்படி உயர்தரப் பாடசாலையிலும் இடம்பெறவுள்ளது. (உ-6)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளிப் பகுதியில் நீண்ட காலமாக கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெறாமையால்,

இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைஅதிகரித்துள்ளதுடன்.

அவை ஒருவித குட்டை நோய்களுக்கு உட்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து யாழ். மாநகரசபையிடம் சுட்டிக்காட்டிய போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை, கட்டாக்காலி நாய்களின் குட்டை நோய் வளர்ப்பு நாய்களுக்கும் தொற்றியிருப்பதாகவும்,

இதனால், அவற்றின் எஜமானர்கள் நாய்களை அழித்தொழிக்கும் வகையறியாது திண்டாடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-110)

# மக்கள் வங்கி தனியார் மயமாவதற்கு எதிராகப் போராட்டம்

(கொழும்பு)

மக்கள் வங்கியினை தனியார் மயப்படுத்த அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து போராடத் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம், மக்கள்வங்கி கிளை ஊழியர்கள் சங்கம், மக்கள் வங்கி அதிகாரிகள் சங்கம், கூட்டுத் தொழிற்சங்கங்கள், இலங்கை சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் ஆகியனவே இவ்விதம் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக போராடத் தீர்மானித்துள்ளன.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிதி நெருக்கடிகளை கருத்தில் கொண்டு பல்வேறுபட்டஅரச சொத்துக்கள் தனியார் மயமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கன. (உ-8)

# நெடுந்தீவு மேற்கு தொடர்ந்தும் புறக்கணிப்பு

(கொக்குவில்)

புனரமைப்பு விடயத்தில் நெடுந்தீவு மேற்குப்பகுதி தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக அப்பகுதிமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நெடுந்தீவின் ஏனைய பகுதிகளில் பரவலாக புனரமைப்புப் பணிகள் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும்,

புவியியல் ரீதியாகத் தனியான பண்புகளைக் கொண்ட நெடுந்தீவு மேற்கு புறக்கணிக்கப்படுவது ஏன் எனவும் மக்கள் வினாவெழுப்பியுள்ளனர். (உ-243)

# சட்டமூலம் இம்மாதம் சமர்ப்பிக்கப்படாது

(கொழும்பு)

முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போன்று எம். பி.க்களை மனச்சாட்சிப்படி வாக்களிப்பதற்கு அனுமதிக்கும் சட்டமூலம் இம்மாதம் சமர்ப்பிக்கப்பட மாட்டாது எனதெரிய வந்துள்ளது. 18 வது திருத்தச்சட்டத்தை மூன்றில் இரண்டுபங்குபெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு வசதியாக எதிர்க்கட்சி எம். பி. க்களின் ஆதரவை பெறும் நோக்கத்துடனேயே இச்சட்டமூலம் தாக்கல் செய்யப்படவிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தச் சட்டமூலம் இதுவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்விலும் இதனை நிறைவேற்ற முடியாது போகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது சட்டமூலம்சமர்ப்பிக்கப்பட்டு 14 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டதன் பின்னரேஇரண்டாம்வாசிப்பு நடத்தப்படவேண்டும் என்பது சட்டத்தேவையாகும்.

இதனை ஒரு அவசரசட்டமூலமாக சமர்ப்பிப்பதாயின் அது ஜனாதிபதியின் உடன்பாட்டுடன் மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆனால் அவ்வாறான ஒரு அவசரக் கோரிக்கை விடயத்தில் ஜனாதிபதியின் உடன்பாடு பெறப்படமுடியாததாகவிருக்கும் என்று பொ. ஐ. மு. எம் பி. நிமல் ஸ்ரீபால டீ சில்வா தெரிவித்தார்.

இதே வேளை, காலி மாவட்ட பொ. ஐ. மு. எம். பி. றிச்சாட் பத்திரன தான் மனச்சாட்சிப்படி வாக்களிக்க எம். பிக்களை அனுமதிக்கும் சட்டமூலத்தை ஆதரிக்கப் போவதாக தெரிவித்துள்ளார். (உ)

# கருத்தொருமித்து செயற்படாவிட்டால் இனப்பிரச்சினைத் தீர்வு சிரமமானது

## பிரதமர் ரணில் எதிர்க்கட்சிக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் முக்கியமானபிரச்சினையாக கருதப்படும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டுமெனில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்று சேர வேண்டும்.

இல்லாவிடில் அதுசிரமமான காரியமாகும் என பிரதமர் ரணில் விக்கிரசிங்கா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் பௌத்த விகாரைக்கட்டடம்ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாடு, அபிவிருத்தி மற்றும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம்காண வேண்டுமானால் இருகட்சிகளிடையேயும் உள்ள கருத்துவேறுபாடுகளையும் குறுகிய பேதங்களையும் மறந்து கருத்தொற்றுமை கொள்ள வேண்டிய காலம் கனிந்துள்ளது.

எமது நெருங்கிய அயல் நாடான இந்தியாவின் ஒத்துழைப்புக்களை இனப்பிரச்சினை குறித்த விடயங்களில் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## இணையத்தளம் ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

உளநலதகவல் மையத்தின் 'மனஅலை' இணையத்தளம ஆரம்பவிழா யாழ் போதனா வைத்தியசாலை அறை எண்-30 இல்நாளை திங்கட்கிழமை மு. ப 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணையத்தளத்தினை யாழ். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம், வைத்திய கலாநிதி தயாளன் அம்பலவாணர் ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (த)

## உதைபந்தாட்டம்

(சுண்டுக்குளி)

வட கிழக்கு மாகாணவிளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெற்று வந்த, உதைபந்தாட்டப் போட்டித் தொடரின்; இறுதி ஆட்டம் கடந்த வெள்ளியன்று துரையப்பா விளையாட்டு அரங்கில்திருமதி ஏ. எவ். ஜே. றூபசிங்கம் தலைமையில் விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ். திருமாறன் அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

இவ் ஆட்டத்தில் யாழ் பிரதேச செயலக அணி, கோப்பாய் பிரதேச செயலக அணியை 1: 0 என்ற கோல் கணக்கில் வென்று இவ் வருட சம்பியின் ஆனது.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக நித்தியநாயகம், ரி. கருணாகரன், ரி. றெக்சன் ஆகியோர் கடமை யாற்றினர். (உ-110)

# கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன்

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தி வந்த கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை கல்வியங்காடு சட்டநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள சங்க விளையாட்டு மைதானத்தில் சங்கத்தின் தலைவர் கப்டின் டி. ஏ.எம். குணசிங்கம் தலைமையில் மின் ஒளியில் நடைபெற்றது.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கே. கே எஸ். விளையாட்டுக்கழக அணியை 3 நேர் செற்றுக்களில் 25:9, 25:10, 25:9 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக ரி. கருணாகரன், கே. நாகேந்திரம் ஆகியோர் கடமையாற்றினர்.

இரண்டாவதாக இடம் பெற்ற 3 ஆம் இடத்திற்கான (ஆண்கள்) தெரிவு ஆட்டத்தில் அச்சுவேலி இந்து விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கே.கே.எஸ். அணியை இரு நேர் செற்றுக்களில் 25:22, 25:18 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக கே. நாகேந்திரம் எஸ் சுதாகர் ஆகியோர் கடமை யாற்றினர்.

ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் கழக அணி அதனை எதிர்த்தாடிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை 3:1 என்ற செற் கணக்கில் 22:25, 25:10, 25:22, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இவ்வருட சம்பியன் ஆனது. (உ-110)

# அரசாங்க ஊழியர்களுக்காக மாவட்டம் தோறும் 1000 வீடுகள்

(கொழும்பு)

அரச ஊழியர்களிற்கு நாடாளாவிய ரீதியில்25 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டமொன்றினை பொது நிர்வாக முகாமைத்துவ சீர்திருத்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என வஜ்ரஅபயவர்த்தனா தெரிவித்துள்ளார்

எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் இத்திட்டம் மூலம் மாவட்டம் தோறும் ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் எனவும்,

அதற்காக வெளிநாட்டுநிறுவனங்களினதும் அமைப்புக்களினதும் உதவி பெறப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் இடமாற்றம் பெறும் அரச ஊழியர்களுக்கு 10வீதம் ஒதுக்கப்படவுள்ளது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

# ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதமாம்!

பஞ்சம் போகும் ஆனால் பஞ்சத்தால் பட்ட வடு போகாது என்பது ஆன்றோர் அமுத வாக்கு. இதன் செல்வாக்கு யதார்த்தத்தில் செயலிழந்த போதும் சில இடங்களில் ஆணி வேரைத் தாக்கும் ஒன்றாகச் சமூகத்தில் புரையோடியுள்ளது. யாரோ ஒருவன் என்றோ ஒரு நாள் செய்த தவறுக்காக சந்ததி சந்ததியாக அவ்வினத்தவர் பாதிக்கப்படுவது பொருத்தமல்ல என்பதை விளக்க ஒரு கதை.

வான் உயர்ந்த மரங்கள் நிறைந்த காடொன்றில் குரங்குகள் கூட்டம் கூட்டமாக மரத்துக்கு மரம் தாவி தங்கள் சாகச விளையாட்டுகளைக் காட்டியவாறே நீண்ட தூரம் சென்றுவிட்டன. ஆனால் இதைப் பார்த்து ரசித்தவாறே மரக் கொப்பிலிருந்த கிழக் குரங்கொன்று தங்கள் மூதாதையரின் வாழ்க்கை வரலாறுகளை அசைபோட்டுக் கொண்டிருந்தது. மனிதனே மனிதனைப் பார்த்து குரங்குக்குப் புத்தி சொன்ன தூக்கணாங் குருவிக் கூட்டை பிய்த்து எறிந்தது போல என்ற உவமை தமது மொழியில் சேர்த்து எம்மை இழிவு படுத்துகிறார்களே. யாரோ ஒரு மூடக்குரங்கு என்றோ ஒரு நாள் அவசர புத்தியுடன் செய்ததை இன்றும் கலைத் திட்டத்தில் புகுத்தியுள்ளார்களே. இதுஎன்னகேவலம்சீச்சீ என்றுதலையில் அடித்து புலம்பிக் கொண்டிருந்த வேளையில், அவ்விடத்தில் வந்த நரி குரங்காரிடம் விபரத்தைக் கேட்க அது முற்காலத்தில் நடைபெற்ற சம்பவத்தை முழுமையாக வேதனையுடன் நரிக்கும் கூறி முடித்தது. இதைக் கேட்ட நரியும் மெதுவாக நகரத் தொடங்கியது.

நரிக்கு விளக்கம் கூறிய மனச் சாந்தியுடன் கிழக் குரங்கு மரத்திலிருந்து கீழே இறங்க முயற்சிக்க திடீரென இடி மின்னலுடன் பெருமழை பெய்யத் தொடங்கியது. மீண்டும் மேலே ஏறிய குரங்கு மரக் கொப்பு ஒன்றில் கைகளைப் போர்த்தவாறு குந்தியிருந்தது. அம் மரத்தில் கட்டியிருந்த கூட்டில் ஒதுங்கியிருந்த காகம் தூக்கணாங் குருவியின் கதை தெரிந்தும் இக் குரங்கில் இரக்கப்பட்டு தாத்தா நீங்களும் ஒரு சிறு வீடுமாதிரியானவீடொன்றை கட்டி வயோதிப காலத்தில் வாழ்ந்திருக்கலாம் தானே என்று பரிவுடன் கூறியது. காக்கையாரே எனக்கோ கூடு கட்டத் தெரியாது. எம்மினத் தவராலும் முடியாது, தற்போது கட்டிய கூட்டைப்பிரிக்கவும் தெரியாது எம்மிலிருந்து வளர்ச்சியடைந்த மனிதனோ எத்தனையோ விதமான வீடுகளைக் கட்டுகிறான். எப்படியெல்லாமோ வாழ்கிறான். குழப்படிப் பிள்ளைகளைப் பார்த்து குரங்கின் கைப் பூமாலை என்று ஏளனப் படுத்துகிறான். அவனுக்குக் கொடுத்த வரத்தைஇறைவன் எமக்குத் தரவில்லை. உமது கூட்டைப் பிரித்ததாக மனிதனுக்கு இன்ரநெட்டின் மூலமும், செய்மதியின் மூலமும் தகவல் கிடைத்தால்அதையும் தன் அகராதியில் சேர்த்து மேலும் இழிவு படுத்துவான், சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்தது போலாகிவிடும், உமக்குக் கூறிய இந்த ஆலோசனை நவீன ஊடகங்கள் மூலம் அவனுக்குக் கிடைக்கட்டும் எமது நல்ல குணத்தை ஏற்று புத்தி வந்த குரங்கு காகத்துக்கும் சொன்னது போல என்ற உவமைத் தொடரை ஏற்றுக் கொள்வானா அல்லது புதிய மொந்தையில் பழைய கள் தானா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்று புலம்பியவாறு இருந்தது.

பழையன கழிதலும் புதியன புகுதலும் எமது மரபு தானே என்பதை உணர்ந்து மகிழ்வோடு வாழ்வோம்

மு.விக்னேஸ்வரன்
கோப்பாய்

# தேர்தல் விதிகளை மீறும் அரச அதிகாரிகள் விசாரிக்கப்படுவார்கள்

(கொழும்பு)

இம் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் போது வாக்களிக்கவுள்ள சகல அரச ஊழியர்களிற்கும் லீவு வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க சகல அதிகாரிகளிற்கும் உத்தரவிட்டுள்ளார்.

17 உள்ளூராட்சி மன்றங்களில் நடைபெறவுள்ள தேர்தலின் போது ஊழியர்கள் ஒவ்வொருவரும் லீவு கோரும் பட்சத்தில் குறைந்தது இரு மணி நேரம் பகுதிநேர விடுமுறையாவது வழங்கவேண்டும் என்றும்,

இந்த தேர்தல் விதியை மீறும் சகல அதிகாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப் படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# வெடிப்பொருளை எடுத்து விளையாடிய சிறுவர்கள் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

இனம்தெரியாத பொருள் ஒன்றை எடுத்து விளையாடிய சிறுவர்கள் இருவர் அது வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அரியாலைமுள்ளியிலுள்ள தமது வீட்டைப்பார்வையிட பெற்றோருடன் சென்றக.சுமன் (வயது13) நா.செந்தூரப்பிரியன் (வயது13) ஆகியஇருவரும் விளையாட்டுப் பொருள் என எண்ணி வெடிபொருளை எடுத்து விளையாடிக்கொண்டிருந்த சமயம் அதுதிடீரென வெடித்துள்ளது.

இதனால் உடம்புமுழுவதும் இவர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் இடம்பெயர்ந்து தற்போது நாச்சிமார்கோவிலடியில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கூடுதலான மாணவர்களை சேர்த்துக்கொள்ள நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வன்னிப் பிராந்தியமாணவர் ஒன்றியங்களைச்சேர்ந்த பிரதிநிதிகள், தொழில்நுட்பக்கல்லூரிகளின் பிராந்தியப் பணிப்பாளர் கே.ஆறுமுகம் பிராந்திய பிரதிப்பணிப்பாளர் த.யோகராஜன் ஆகியோரை நேற்று முன்தினம் தொழில்நுட்பக் கல்லூரியில் சந்தித்துஉரையாடினர்.

இந்தச்சந்திப்பில்மன்னார், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் இடை நிலைக் கல்வியை முடித்துக் கொண்ட மாணவர்கள் மூன்றாம் நிலை கல்வியைக் கற்பதற்கு வாய்ப்புக்களோ வசதிகளோ அற்ற நிலையில் இருப்பதாகவும்,

கிளிநொச்சியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இயங்கி வரும் தொழில் நுட்ப நிறுவனத்தை தொழில் நுட்பக்கல்வி பயிற்சிநிறுவனத்துடன் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க, யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரியில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை, தளபாட மற்றும் இடப்பற்றாக்குறைகள் என்பவற்றைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் கூடுதலான இளைஞர், யுவதிகளை சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் பிராந்திய பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-19)

# லங்கா சீமெந்து நிறுவனத்தின் ஊழியர் மறியல் போராட்டத்திற்கு இல. தமிழர் ஆசிரியர்சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

லங்காசீமெந்து நிறுவன ஊழியர்களின் மறியல் போராட்டத்துக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக்கிளை தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து சங்கம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

முன் அறிவித்தல் இன்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட லங்காசீமெந்து நிறுவன ஊழியர்களை மீண்டும்வேலையில் சேர்க்கும் படியும் அவர்களை வரவுப்பதிவேட்டில் கையொப்பமிட அனுமதிக்க வேண்டும் எனவும் சகலஊழியர்களுக்கும் மாதாந்தம் முழுச் சம்பளம் வழங்கவேண்டும் எனவும், சீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும திறந்து ஊழியர்களின் வேலையில்லா பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும்பல முக்கியகோரிக்கைகளை முன்வைத்து ஒரு மாதத்துக்கு மேலாக மறியற்போர்செய்து வரும் ஊழியர்களின் போராட்டத்திற்குஇலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம்பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ஊழியர்களின்சம்மதமின்றி அவர்களை வேலைநீக்கம் செய்வதும் கொடுக்கவேண்டிய மாதாந்த சம்பளத்தை தொழிற்சாலைஇயங்கவில்லை என்ற காரணத்துக்காக 50வீதம் வழங்கப்படுவதும் மனித உரிமைமீறல் செயலாகும். லங்காசீமெந்து தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் செய்யப்பட்டுவரும் இந்தப் போராட்டம் கைத்தொழில் அமைச்சினால் உடன் கவனத்திற்கு எடுக்கப்பட்டு தீர்த்துவைக்கப்பட இ.த.ஆ.சங்கம் உறுதுணையாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுளளது. (இ)

## நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வடபிராந்தியக் கிளையின் நிர்வாகசபைக் கூட்டம் இன்று மு.ப 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் தலைவர் சா. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## லேக்ஹவுஸ் பொது முகாமையாளர் யாழ்வருவார்

(கொழும்பு)

வடபகுதிக்கான நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் பொது முகாமையாளர் டி.எம்.ஜினதாச தலைமையில் 10பேர் அடங்கிய குழுவினர் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இக்குழுவின் பணிப்பாளர் எ.எம்.என். அமீன், விநியோகப்பகுதியைச் சேர்ந்த ரவி ஆகியோரும் அடங்குவர். (வ)

## கால்நடைகளின் விலைகள் உயர்வு

(கொக்குவில்)

மன்னார்ப் பகுதி வர்த்தகர்கள் நெடுந்தீவில் சருவாடு, புளுக்கொடியல் என்பவற்றைக் கொள்வனவு செய்து செல்கின்றனர்.

அத்துடன் இறைச்சிக்காக ஆடு மாடுகளையும் அங்கிருந்து கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனால் இவற்றின் விலைகள் நெடுந்தீவில் அதிகரித்துள்ளன. (உ-243)

## இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கணபரிசோதனை முகாமும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும் இன்று காலை 8 மணி முதல் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா ம.மாவி நடராசா மண்டபத்தில்இடம் பெறவுள்ளது.

இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் ஆதரவுடன் இடம் பெறும் இந்நிகழ்வில் இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை வழங்க நெதர்லாந்தைச் சேர்ந்த 'ஜா-லுவா' நிறுவனம் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-243)

# மாவலித் துறைமுகத்தில் மீண்டும் மக்கள் நடமாட்டம்

(கொக்குவில்)

சடந்த காலத்தில் பயன்பாடு குறைந்து காணப்பட்ட மாவலித்துறை துறைமுகம் ஊடாக தற்போது மன்னாரிலிருந்து வரும் பொருட்கள் இறக்கப்படுவதனால் இத் துறைமுகம் மீண்டும் பிரபல்யமடைய ஆரம்பித்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட பின்னர் பெருமளவு மரக்கலங்களும், பிளாஸ்ரிக் இயந்திரப் படகுகளும் தலைமன்னாரிலிருந்து அப்பிள், அன்னாசி, வெடிப் பொருட்கள் புடைவைகள் என்பவற்றை ஏற்றி வந்து இவை மாவலித்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்டு குறிகாட்டுவான் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. இதனால் மாவலித்துறை, குறிகாட்டுவான் என்பன வியாபாரிகளால் நிரம்பி வழிவதனையும் சாண முடிகின்றது. (உ-243)

## நீர்த் தாங்கி

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயச் சூழலில் மற்றுமோர் நீர்த்தாங்கி அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்நீர்த்தாங்கி 3 ஆயிரத்து 506 கலன்நீர் கொள்ளளவுடையதாக அமைக்கப்படவுள்ளது. (உ-255)

## சிந்தனைக்கு விருந்து

### பிரச்சினைக்கு விடிவே இல்லை

சில்லறைக் கருந்தல் இங்கு மிகுதி இன்று
சிறியபொருள் சில்லறைக் கீடாய் ஈவார்
வல்லவியா பாரிகள், 'வேண்டாம்' என்றால்
'வாங்கினதைத் திருப்பும்' எனச் சீறிப்பாய்வார்
தொல்லைக்குப் பயந்தவா டிக்கை யாளர்
தொடர்ச்சியாய்த் தீப்பெட்டி 'ரொபி'யை வாங்கி
இல்லத்தில் உள்ளாரின் ஏச்சுக் காளாய்
இருக்கின்றார் பிரச்சினைக்கு விடிவே இல்லை

- பழையவன்

# இந்தியா-பாகிஸ்தான் இடையே விரைவில் பெரும் போர் மூளும்

## ஐ. எஸ். ஐ. உளவு நிறுவனம் தகவல்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மிக விரைவில் பெரும் போர் மூளும் அபாயம்இருப்பதாக ஐ எஸ்.ஐ உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருதரப்பு இராணுவமும் எல்லைப் பகுதியிலேயே குவிக்கப்பட்டு வருவதுடன், இடையிடையிலேயேசிறுசிறுமோதல்களும் அப்பகுதியிலே இடம் பெற்றுவருகின்றன.

இம் மோதல்கள் மிகவிரைவில் பாரிய அனர்த்தங்கள் இடம்பெறசாதகமாக அமையும் என அவ் உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருதரப்புஇராணுவ தளபதிகளுக்கும் அவ்வவ் நாடுகளின் விசேட பயிற்சிகளும் ஆலோசனைகளும் இடம்பெற்றுவருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இருதரப்பு பேச்சுக்கள் குறித்தும் தெற்காசிய வெளியுறவு அமைச்சர் இரு நாடுகளுக்கும் அடுத்த வாரமளவில் செல்லவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-7)

### ஆயுதங்களை உற்பத்தி செய்யும்

# சீன நிறுவனங்களை அமெரிக்கா தடை செய்யும்

(தெஹ்ரான்)

பேரழிவு விளைவிக்கும் ஆயுதங்களை உற்பத்திசெய்யும் ஈரானின் திட்டங்களுக்கு உதவிவரும் சீனநிறுவனங்கள் மீது தடைகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

சீனாவின், ஆர்மேனிய மற்றும் மோல்டோவியா நிறுவனங்கள்மீதே அமெரிக்கா தடைகளை விதிக்கவுள்ளது.

இதற்கிடையில் தீமையின் அச்சுநாடுகள் எனஈரான், ஈராக் மற்றும் வடகொரியாவை குறிப்பிட்ட அமெரிக்க அதிபர் புஷ் அந்தப்பட்டியலில் சீனாவையும் அடக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்படிசட்டவிரோத செயலில் ஈடுபடும் சீனாவின் நிறுவனமாகியஆர்மேனியாமோல்டோவியா என்று தெரிவித்த அமெரிக்கா, அந்நிறுவனங்கள் பற்றிய மேலதிக தகவல்எதையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

### கிறிஸ்ரீனா றொக்கா

# இந்தியா,பாக். நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின், தெற்காசியவிவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்கா அடுத்தவாரம் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான சமாதானப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் பதற்ற நிலையை தணிக்கவும் சமாதானத்திற்கானபுரிந்துணர்வைஏற்படுத்தும் முகமாகவும் இப்பயணம் அமையவுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜத்வந்சிங் மற்றும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஆகியோருடன் இவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ- 7)

# உலக தரிசனம்

# முறையான திட்டங்களின்றேல் பிரச்சினைகளுக்கு முடிவில்லை

### பலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினை குறித்து கட்டார் கருத்து

(கட்டார்)

முறையான திட்டங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதவரை இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவர முடியாது என கட்டார் தெரிவித்துள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக இடம்பெறவுள்ள உச்சி மாநாடு வெறும் வாதங்களை மட்டும் கொண்டிருக்குமே தவிர பிரச்சினை எதற்கும் தீர்வு காணாது என்றும் தெரிவித்துள்ளது.

இது பற்றி விளக்கமளித்த கட்டார் வெளி விவகார அமைச்சர் செய்க் அஃமாபின் ஹாஷிம் அல்தானி, வெறுமனே மாநாடு நடத்துவதைவிட சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதே நிரந்தரமானதும் நீதியுமானதுமான செயல் என்று தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் மற்றும் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆம்டஸ் ஆகியோருடன்நடத்தியபேச்சுவார்த்தையின் பின் செய்தியாளர் மாநாட்டில் பேசியபோதே ஹாஷிம் அல்தானி இதனை தெரிவித்தார்.

(உ-7)

# கப்பல் தீப்பிடித்தது பயணிகளுக்கு பாதிப்பில்லை

(புதுடில்லி)

சுமார் 500 பயணிகளுடன் லட்சதீவு நோக்கி சென்றுகொண்டிருந்த பயணிகள் கடல்கப்பலொன்றுதீப்பிடித்து எரிந்துள்ளது.

எனினும், கப்பலில் பயணித்தவர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் பாரத் சீமாவை சென்றடைந்தவேளை கப்பல் தீப்பிடித்துள்ளது. உடனடியாகச் செயற்பட்டுபரவிய தீ அணைக்கப்பட்டவுடன் கொச்சித்துறைமுகத்திற்கு கப்பல் கொண்டு செல்லப்பட்டது.

கப்பல் தீப்பிடித்ததற்கான காரணம் இதுவரை தெரியாதபோதிலும் அது பற்றிய விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன.

உ(-7)

# காதலி உயிர்வாழ கல்லீரலில் பாதியை வழங்கிய காதலன்

(சிங்கப்பூர்)

காதலி உயிர்வாழ தன் கல்லீரலில் பாதியைவழங்கினான் காதலன்.

சிங்கப்பூரில் இடம் பெற்றுள்ள இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

சிங்கப்பூர் தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றில் வாழ்க்கை முறைகள் பற்றிய நிகழ்ச்சி நடத்தும் 27 வயதுப் பெண்மணி ஒருவர் கல்லீரல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இப்பெண்மணி நீண்டகாலம் வாழ வேண்டுமானால் உடனடியாக கல்லீரல் மாற்று சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது.

இதையறிந்த அதே நிலையத்தில் பணியாற்றி வரும் அவரது காதலன் தனது கல்லீரலில் பாதியை தனது காதலிக்கு தானமாக வழங்கியுள்ளார்.

இப்போது அப்பெண்மணி சுகதேகியாக காணப்படுகிறார். (உ-8)

# நாளையும், நாளை மறுதினமும் கல்விப் பணிப்பாளர்களுடன் படையினர் நிலை கொண்டுள்ள பாடசாலைகள் பற்றி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

படையினர் நிலை கொண்டுள்ள வடக்குக் கிழக்குப் பாடசாலைகளின் நிலை தொடர்பாக ஆராயும் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

நாளையதினம், காலை 9 மணிக்கு யாழ். குடாநாட்டிலுள்ள 5 வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களுக்குமான கூட்டம் சுபாஸ் ஹோட்டலிலும்,

பி.ப 2 மணிக்கு மன்னார், மடு, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் காலை 9 மணிக்கு திருகோணமலையில் உள்ள கல்வி அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் திருகோணமலை அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சகல வலயப் பணிப்பாளர்களுக்குமான கூட்டம் நடைபெறவுள்ளது.

இராணுவத் தளபதி லயனல் பலகல்ல உட்பட இராணுவ உயர் அதிகாரிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, படையினர் நிலை கொண்டுள்ள பாடசாலைகள், அதனால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே. சண்முகலிங்கம் இது தொடர்பான சுற்று நிருபத்தை சம்பந்தப்பட்ட சகல லவயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார். (உ-19)

# ரயில் தடம் புரண்டது

(லண்டன்)

லண்டனிலிருந்து கிங்ரைன் நோக்கி பயணத்தை மேற்கொண்டிருந்த ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 6 பேர் பலியாகியுள்ளனர் 15 பேர் காயமடைந்துள்ளனர். (உ-7)

### வெளிநாட்டு வேலை வாய்ப்பை

# அதிகப்படுத்த புதிய திட்டம் செயற்படுத்துகை

(கொழும்பு)

இலங்கை இளைஞர் யுவதிகளிற்கு அதிகமான வேலை வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளதாக தொழில் வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

இதற்காக ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுடன் பேச்சுவார்த்தையை அடுத்த மாதமளவில் நடத்த இருப்பதாகவும்,

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக, இத்தாலிக்கு இளைஞர்களை வேலை வாய்ப்பு கருதி அனுப்புவது குறித்து, அவ்வரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மத்தியகிழக்கு நாடுகளிற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# பாடசாலை மேம்பாட்டு பயிற்சித் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அதிபர்கள், ஆசிரியர்கள், ஆரம்பப்பிரிவுத்தலைவர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோர்களுக்கான பாடசாலை மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் நேற்றுக் காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எதிர் வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் இடம் பெறவுள்ள இப்பயிற்சித் திட்டம் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் அமுல் படுத்தப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள பாடவிதான அலுவலர் எம்.பி.எம்.எம். சிப்லி தேசிய கல்விநிறுவக உதவிச் செயற்றிட்ட அதிகாரி எஸ்.முகுந்தன் ஆகியோர் பயிற்சிகளை வழங்க இங்கு வந்திருப்பதுடன்,

இதன் இணைப்பாளராக ஆரம்பக்கல்வி இணைப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-6,23)

### ஐ.எஸ்.ஏ.

# உளவு அமைப்பு உறுப்பினர் உத்தர பிரதேசத்தில் கைது

(புதுடில்லி)

ஐ.எஸ்.ஏ. உளவு அமைப்பைச் சேர்ந்தவரெனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் உத்தரப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச பெரும் புள்ளிகள் சிலர்களின் முகவரிகள் அடங்கிய நாட்குறிப்பேடு உள்ளிட்ட சில ரகசிய உபகரணங்களும் இவர் வசமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கொறியா மூலமாக இவ் ஆவணங்களை கராச்சிக்கு அனுப்ப முற்பட்ட வேளை இந் நபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆறு மாத காலமாக இவர் விசேட புலனாய்வு பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

ஆராய்ந்து கொள்ளாதான் கேண்மை
கடைமுறை தான் சாந்துயரம் தரும்.

குறள்

# வலம்புரி

## யானை வரும் பின்னே !

இலங்கை இனப்பிரச்சினையில் அரசும்- விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ததன் மூலம் நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்பட்டது உண்மையாயினும் அரசின் போக்கு மிகவும் பயங்கரமானதாக அமையும் போல் தெரிகிறது.

அதாவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசு, விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது அமெரிக்க வல்லரசின் ஆலோசனையின் படியே மேற்கொண்டுள்ளதென்பது இப்போது வெளிப்பட்டு விட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா யாழ்ப்பாணம் வருகை தந்த போது அமெரிக்க வெளியுறவு இணை அமைச்சரும், அமெரிக்க விமானப்படை அதிகாரிகளும் பலாலி விமானத் தளத்தில் வந்திறங்கினர்.

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்ற பழமொழிக்கு ஒப்பானது போல் அமெரிக்காவின் செயற்பாடுகள் அமைந்துள்ளது. இதனை மேலும் உறுதிப்படுத்துவது போல் அமெரிக்கயுத்தகப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துபோகும் நிகழ்வு அமைந்துள்ளது

அரசும்- விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் போது அமெரிக்காவின் பாரிய யுத்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வருவதில் பெரியதொரு அபாயம் உண்டு என்பதை தமிழ் மக்கள் மறந்து விடக்கூடாது.

அதேவேளை விடுதலைப் புலிகளை எச்சரிக்கை செய்வது போலும் இக்கப்பல்களின் வருகை அமைந்துள்ளது.

அமெரிக்க யுத்தக் கப்பல்கள்இலங்கைவருவதும் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் யுத்தம் புரிய நேர்ந்தால் வல்லரசுநாடுகளின் ஒத்துழைப்புப் பெறப்படுமென சமுர்த்தி அமைச்சர் எஸ் பி திஸநாயக்கா கூறியிருப்பதும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதென்பதையும் யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதையும் இது காட்டி நிற்கிறது.

# கிறிஸ்துவின் நற்செய்தியின்படி வாழ்பவரே விண்ணக மகிமையை உரிமையுடன் பெறுவர்

## பரமபிதாகாட்டிய பாதை



செய்பயிருக்கு அதற்கு வேண்டிய பராமரிப்பும், பாதுகாப்பும் கொடுக்கப்படுகின்றபோது அப்பயிரில் இருந்து மிகுந்த பலனைப் பெறலாம் என்பது அனுபவ உண்மையாகும். அவ்வாறே சாட்சிய வாழ்வு என்பது ஒரு பணியை முன்னெடுத்துச் செல்லத் துணை புரிகின்றது, இயேசுவும் உயிர்த்து, தமது சீடர்களுக்கு காட்சி கொடுத்த போது சாட்சிய வாழ்வு வாழ அவர்களுக்கு அறிவுரை கூறினார். அவ்வாறு கூறிய பின்னர் விண்ணகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

கிறிஸ்தவ வாழ்வின் முழுமையும் சாட்சிய வாழ்விலே நிறைவு பெறுகின்றது. இயேசு தம் சீடர்களுக்குப் பணித்த போது 'விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது' எனவே நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். (மத் 28: 18) என்றார். இதன் அடிப்படையிலே ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாட்சிய வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றார்கள்.

அன்பின் கொடை நற்செய்தி

நம்மை இறைவனிடம் சங்கமிக்கும் மிகப்பெரிய கொடை நற்செய்தியாகும். அந்த நற்செய்தியின் ஒளியிலே சாட்சிய வாழ்வுக்கு நாம் சான்று பகர வேண்டும். தூய ஆவியின் உண்மைக் கருத்து 'அன்பு' என்பதுதான். அன்புள்ளவன் தனக்காக வாழ்வதில்லை. மற்றவர்களையும் அவன் நேசிக்கிறான். இயேசுவின் வழியை எமக்குக் காட்டித் தருபவர் தூய ஆவியே. தூய ஆவியின் உண்மை வழிநடத்தலிலே வாழ்பவனே கிறிஸ்துவை அறிவான். கிறிஸ்துவை அறிந்தவனேஉண்மைக் கிறிஸ்தவனாவான். பெயரளவில் உலகப் போக்குக்கு உட்பட்டு நாம் வாழும்போது நிச்சயம் தண்டனைக்கு ஆளாவோம்.

கடவுள் தன்மையில் விளங்கிய அவர் (இயேசு) தம்மைத் தாழ்த்தினார். நகைப்புக்குரிய சிலுவைச் சாவை ஏற்கும் அளவு கீழ்ப்படிந்தார். அதனாலே பரமதந்தை அவரை எப்பெயருக்கும் மேலானவராக உயர்த்தி விண்ணேற்பு அடையச் செய்வாறு சாட்சிய வாழ்வு வாழ்பவரே இறுதித்தீர்ப்பு நாளில் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே விண்ணக மகிமையைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்' என்ற ஆசிரைப் பெறுவார்கள்:

எம் பாதையின் விளக்கு திரு விவிலியம்

அநீதியும், ஆக்கிரமிப்புக்களும், மனித நேயமற்ற செயல்களும் அதிகரித்துவரும் தார். மாட்சிமையை அவருக்கு முடியாகச் சூட்டினார்.

காலத்தின் தேவை கருதியும், காலத்தோடு அடித்துச் செல்லப்படாது கலங்கரை விளக்கங்களாக எடுத்துக்காட்டான சாட்சிய வாழ்வை நாம் வாழவேண்டும். இன்றைய சூழ்நிலையும், எதிர்வரும் சூழ்நிலையும்எம்மை எமக்குச் சவால் நிறைந்ததாக அமைந்தாலும் எதிர்நீச்சல் போடும் மீன்போல நாம் பின்வாங்காது உலகின் போக்கை எதிர்கொள்ள வேண்டும். அவ் உலகிலே அன்பும், நீதியும், மனித நேயமும் வளர நாம் சான்று பகரவேண்டும் சிறிய ஒளிச்சுடராகத் தீமைகளை அகற்ற முயற்சிப்பதால் பெரிதான நன்மைகளை வளரச் செய்யலாம். எம் பாதைக்கு விளக்கான திருவிவிலியத்தின் ஒளியிலே எம் வாழ்வைக் கட்டியெழுப்பி அந்த ஒளியின் வழியிலே மற்றவர்களையும் அழைத்துச் செல்ல இறைவனின் துணையை நாள் தோறும் பெற்று இறைவழி தொடர்வோமாக.

### அமல அருள்தாசன்

## இடைக்கால நிர்வாக அமைப்புக்கு எதிராக

# அரச எம்.பிக்களின் வீடுகள் மீது முற்றுகை போரை முடுக்கி விடப் போகிறாராம் மங்கள

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் அமைக்கும் முயற்சிகளுக்கு எதிராக மக்களை வீதிகளில் இறக்கி போராட்டம் நடத்த போவதாகவும், அரசாங்க எம்.பிக்களின் வீடுகளை சூழ்ந்து கொண்டு போராட்டங்களை முடுக்கி விடப் போவதாகவும் பொ. ஐ. மு எம்.பி மங்கள சமரவீர அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் செய்துகொண்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் நாட்டை இரண்டாவதுதடவையாகவும் காட்டிக்கொடுத்த ஒன்றாகும்.

இடைக்கால நிர்வாகத்தை பொ.ஐ.மு முற்றுமுழுதாக எதிர்க்கிறதுஎனக்கூறிய சமரவீர,

போர்நிறுத்தஒப்பந்தத்தை புலிகள் தமதுஇலக்காகியஈழத்தையடையும் வரைவைத்திருக்கவிரும்புவர் என்றும் நாடு பிளவு படாதவகையில்அதிகாரம் பகிரப்படுவதே தமது கொள்கை எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் நோர்வேயை அனுசரணையாளர்களாகவே அழைத்திருந்தது ஆனால் இன்றுஅவர்கள்சமரசப் பேச்சாளர்களாகி விட்டனர் என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

(உ)

# கட்டுடை அகதிமுகாம் மக்கள் அடிப்படை வசதியின்றி அவலம்

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் கட்டுடை கேலன்காமம் நலன்புரிமுகாமில் வசிக்கும் மக்கள் எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி, துன்பத்தின் மத்தியில் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர்.

வலி வடக்கில்இருந்துஇடம் பெயர்ந்த 21 குடும்பங்கள் 19 குடிசைகளில் இந் நலன் புரி நிலையத்தில் வாழ்கின்றனர்.

இவர்களுக்கு வேண்டியகுடிநீர் விநியோகத்தை எந்தவொரு பொது அமைப்பும் மனிதாபிமான ரீதியில் மேற்கொள்ள முன்வரவில்லை.

இதனால் பலமைல் தூரம் நடந்து சென்று வயல் கிணறுகளில் நீரைப்பெறுவதுடன், இது விடயத்தில் பல இடையூறுகளையும் அனுபவித்துவருகின்றனர்.

மாரிகாலமானால் நீர்பெறுவதற்கு வயல் கிணறுகளுக்கும் செல்லமுடியாது.

முன்பு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் இங்குள்ள மக்களின் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த போதிலும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதால்,

சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்படாத நிலையில் அங்கு சுகாதாரச் சீர்கேடு நிலவ வாய்ப்பிருப்பதுடன் தொற்றுநோய் அபாயமும் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-255)

## தினசரி தியானம்

### கோபம்

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற-

-திருக்குறள்

கோவே, நான் கோபத்தின் வசப்பட்டு விடும் போதெல்லாம் உனக்கு வேற்றானாகி விடுகிறேன். கோபத்தைக் களைந்து விட்டு நான் உனக்கே உரியவன் ஆவேனாக.

முறை மாறியமையும் போது அமிர்தம் நஞ்சாகிறது. மனது அமிர்த சொரூபம். அது கோபம் கொள்ளும் போது நஞ்சாக மாறுகிறது. கோபித் திருக்கும் வேளையில் எண்ணுகிற எண்ணம் கொடியது. மேலும் உடல் முழுதுமே அப்பொழுது கொடியதாகிறது. உண்ணுகிற உணவும் நஞ்சாய் விடுகிறது. தற்காலிகமாக அமையும் பைத்தியம் எனப்படுகிறது கோபம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## வேலையற்ற

# இளைஞர் யுவதிகளின் விபரம் திரட்டப்படுகிறது

(கொழும்பு)

வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு 2ஆயிரம் ரூபா வழங்குவது குறித்து அரசாங்கம் கணக்கெடுப்புகளை நடத்தி வருவதாக தொழில், தொழில் வாய்ப்பு அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளபடி வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில் கிடைக்கும் வரைஇரண்டாயிரம்ரூபாவை வழங்கும் எனவும் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

(உ-3

## ஏ.9 பாதையூடாக

# 24மணிநேரப் பயணத்தை அரசு மட்டும் தீர்மானிக்க முடியாது

### இராணுவப் பேச்சாளர் சனத்கருணாரட்ன

(கொழும்பு)

ஏ9 கண்டி வீதியை 24மணி நேரமும் திறந்துவிடுவது தொடர்பாக அரசாங்கம் மட்டும் தனியே தீர்மானிக்க முடியாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத்கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

ஏ9கண்டி வீதியை 24மணி நேரமும் திறந்து விடவேண்டும் என்று தமிழீழ அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தமை தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத்கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

முகமாலை சோதனைச்சாவடி 24 மணி நேரமும் திறந்திருக்கவேண்டும் என்பதை விடுதலைப்புலிகள், அரசாங்கம், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகிய மூன்று அமைப்புக்களுமே கூடித்தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும் கூறினார். (ந.)

## வடக்கு- கிழக்கில் கடமையாற்ற

# ஓய்வு பெற்ற டாக்டர்கள் தாதியருக்கு மீள்நியமனம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு வைத்தியசாலைகளில் நிலவும் டாக்டர்கள், தாதியர்கள் பற்றாக்குறையைப் போக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக மட்டக்களப்பு, வல்வெட்டித்துறை வைத்தியசாலைகள்இல் நிலவும் டாக்டர்கள், தாதியர் பற்றாக்குறையைப் போக்க ஓய்வூதியம் பெற்ற டாக்டர்கள், தாதியர்களை மீண்டும் நியமனம் செய்து அவர்களுக்கு. ஓய்வூதியத்துடன் மேலதிக சம்பளமும் வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரத்தினா தெரிவித்துள்ளார்.

இதேவேளை வருடந்தோறும் 10 ஆயிரம் பேருக்கு தாதிப்பயிற்சி வழங்கி சேவையில் ஈடுபடுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது (வ)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் 21 இல் பிரதமரைச் சந்திப்பர்

(கொழும்பு)

தமிழர் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த இருப்பதாக மட்டக்களப்பு மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

பயங்கரவாதச் தடைச்சட்டத்தை நீக்குவது, சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது, விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது உட்பட பலதரப்பட்ட விடயங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடனான பேச்சுவார்த்தையின் போது கலந்துரையாடப்படும் எனத் தெரிவித்தார்.

இப் பேச்சுவார்த்தையின் போது தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கட்சிகளான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ்அணி) ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசின் சார்பில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சட்டமா அதிபர் கமல சபேசன் மற்றும் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் ஜோசப்பரராஜசிங்கம் எம்.பி தெரிவித்துள்ளார். (வ)

### புரிந்துணர்வு...

தமிழ்ச்செல்வன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை தமிழர் கூட்டமைப்பு மேற்கொள்ளவேண்டும். அத்துடன் இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பாக பெரும்பான்மை இனமக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பும் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என்றும் தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க கடந்தமுறை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் தொடராக இப்பேச்சுவார்த்தை அமையவுள்ளதென்றும், தொடர்ந்து மாதம் ஒருமுறை சந்தித்து நடப்பு அரசியல் சூழ்நிலை தொடர்பாக பேசுவதென்றும் இருபகுதியினரும் இணக்கம் கண்டுள்ளதுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் புலிகள் தரப்பில் குறை கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ம)

### சமாதானத்தை ...

வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் நான்கு குதிரைகள் இடம்பெறுவுள்ளது.

இந்தச் சவாரி மூலம்சேகரிக்கப்படும் பணம் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்படும் என்று சவாரி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் புறப்பட்ட இந்தச் சவாரி எதிர்வரும் 18ம் திகதி யாழ்ப்பாணத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ.5)

# ஆவரங்காலில் விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நிகழ்கால அரசியல் விழிப்புணர்வுக் கூட்டம் நேற்று ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் எஸ்.சிவஞானம் தலைமையில நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் எஸ். துரைசிங்கம் வலிவடக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் எஸ். கந்தையா மற்றும் வித்தியாலய அதிபர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியலத்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் போராளி சத்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். (இ)

# தென்மராட்சி வலய அதிபர்களுக்கு நாளை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொடிகாமம் அ.த.க பாடசாலையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ: செல்வராசா கேட்டுள்ளார். (இ)

### அணு ஆயுத...

இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் அமெரிக்கக் கடற்படையினர் இலங்கை கடற்படையினருடன் விசேட ஒன்று கூடல்களில் கலந்து கொள்வரெனறும். இலங்கைக் கடற்படையினருக்கு பயிற்சி அளிப்பரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்கப போர்க் கப்பலின் வருகைக்கான காரணம் புரியாத புதிராக இருக்கின்றபோதும் சமாதான சூழலில் இக்கப்பலின் வருகை மக்கள் மத்தியில் பலவித சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தவாரம் அமெரிக்காவின் போர்க்கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்திற்கு வந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### புலிகள் ...

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினருடனான சமாதான முயற்சிகளுக்கு நாட்டில் உள்ள பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவு இன்றி சமாதானத்தைக் காண்பதென்பது மிகவும் கடினமான காரியமாகும். அனைவரும் ஒத்துழைப்புத் தந்தால்த்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காண முடியும்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை சர்வதேச நாடுகள் அக்கறையுடன் கண்காணிப்பதுடன் தங்களுடைய பார்வையை அரசு மீதும், விடுதலைப் புலிகள் மீதும் திருப்பியுள்ளன.

இந் நிலையில் விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டால் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்" செய்யக் கூடிய சூழ்நிலை தற்போது காணப்படுகிறது.

அரசும், விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக வெளிநாடுகளுக்கு அறிவிப்பதற்காக அந்நாடுகளுக்குப் பிரதிநிதிகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் தாயகக் கோட்பாட்டை அரசு ஒரு போதும் அங்கீகரிக்கப் போவதில்லை. இந் நிலையில் வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பது தொடர்பாக எந்தவொரு ஒப்பந்தமும் யாருடனும் செய்து கொள்ளவில்லை என்றும் பிரதமர் ரணில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் (வ)



மெலிஞ்சிமுனை உயிர்ப்பூட்டல்க் குழுவினரால் நடாத்தப்பட்ட "சமாதானக் கலையிரவு" நிகழ்வினை மங்களவிளக்கேற்றி தொடக்கிவைக்கும் லியோ குழு பிரதிநிதி யுடன் கியூடெக் இயக்குனர் C.G. ஜெயக்குமார் அடிகளார் இணைப்பாளர் யோசப்பாலா, குணம் ஆகியோர் காணப்படுகின்றனர்.



தொ.நு.கல்வி வலயம் 4ன் வடக்கு கிழக்கு பிராந்திய உப பணிமனை யாழ்ப்பாணத்திற்கு பிராந்தியப் பணிப்பாளர் க.ஆறுமுகம் அவர்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்தபோது பிரதிப் பணிப்பாளர் ந.யோகராஜன் பொன்னாடை போர்த்தி வரவேற்பதையும் தொ.நு.க.பிரதி அதிபர் எம்.அலோசியஸ் உட்பட கல்லூரிச் சமூகத்தினர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்



காரைநகரில் அண்மையில் பொங்குதமிழ் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்ட போது தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்படுவதைப் படத்தில் காணலாம்.



யாழ் மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கத்தினரால் அண்மையில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிப்பட்டறை நிகழ்வில் முதலாம் இடத்தைப்பெற்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித். மாணவன் அமைச்சர் மகேஸ்வரனிடம் இருந்து கேடயத்தை பெற்றுக் கொள்வதையும் அருகில் பொ.சு.பரிசோதகர் தயாமோகன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

### பயணிகள் கப்பல்...

தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

யாழ் கண்டி நெடுஞ்சாலை திறக்கப்பட்ட பின்னர் பெருந்தொகையான பயணிகள் இந் நெடுஞ்சாலையூடாக பயணத்தினை மேற்கொள்கின்றமையே கப்பல் பயணிகள் தொகையில் வீழ்ச்சி ஏற்படக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது (உ.10)

### தளுவத்தைக்கு...

"வீரவிக்கிரவிபூஷண" விருதை தவறான வழியில் பயன்படுத்தியுள்ளார் என்றும் மனுவில் சுட்டிகாட்டியுள்ள மனுதாரர் பூநகரி முகாம் தாக்குதல் தொடர்பாக இடம்பெற்ற விசாரணையின் போது தளுவத்தையை இராணுவத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று சிபார்சு செய்திருந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளார் (வ)

அன்பார்ந்த மாணவர்களே!
மிக விரைவில் வலம்புரியில் எதிர்பாருங்கள்
க.பொ.த (சா) தரப் பாடங்களிற்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்
(யாழ் நகரின் பிரபல ஆசிரியர்களின் தயாரிப்பு)

லாலா
சோப் சண்சயின் சோப்
எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வரவிருக்கின்றது.
லாலா அச்சுவேலி

மில்க்வைற்
MODERN MILK WHITE SOAP
25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து ஓர் அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள.
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541

ராஜா
(யாழ்ப்பாணம்)
5வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன் TAMILAN
தினசரி 10.30, 2.30
சனி ஞாயிறு 10.30, 2.30, 5.30
[C/3953]

இனாம்
ஐந்து மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை உங்கள் வாடிக்கை விற்பனையாளரிடம் கொடுத்து ஒரு சோப் இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
MILKWHITE VMK SOAP
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
525/2,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

பற்களின் வெண்மைக்கும் பாதுகாப்பிற்கும்
அன்னா பற்பொடி
அன்னா தொழிலகம், இணுவில்